Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 31 | உள்ளூர் - 31.01.2026 | சனி | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 54 | * Issue 32 | வெளியூர் - 01.02.2026 | ஞாயிறு | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

இந்த பெண் ராசிகளுக்கு ஆண் நண்பர்கள் அதிகம்!

வங்கியில் 2,050 காலியிடங்கள், டிகிரி

திமுகவுடன் மல்லுக்கட்டும் காங்கிரஸ்?

பட்ஜெட்டில் நடுத்தர வர்க்கத்திற்கு ஜாக்பாட்..?

## வெனிசுலா இடைக்கால அதிபருடன் பிரதமர் மோடி உரையாடல்!



புதுடெல்லி, ஜன. 31–

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவை போதைப்பொருள் பயங்கரவாதி என்றும், வெனிசுலாவில் இருந்து அமெரிக்காவுக்குள் போதைப்பொருட்கள் கடத்தப்படுவதாகவும் அமெரிக்க அதிபர் டிரம்ப் கடுமையான குற்றச்சாட்டுகளை கூறி வந்தார். இந்த நிலையில், நிக்கோலஸ் மதுரோவும், அவருடைய மனைவி சிலியா புளோரசும் அமெரிக்க ராணுவ வீரர்களால் இந்த மாத தொடக்கத்தில், கைது செய்யப்பட்டு வெனிசுலாவில் இருந்து நாடு கடத்தப்பட்டனர்.

இதனிடையே, எண்ணெய் வளத்திற்காக வெனிசுலா குறி வைக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டும் எழுந்தது. வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப்பட்ட பின்னர், அந்நாட்டின் தற்காலிக ஜனாதிபதியாக டெல்சி எலோய்னா ரோட்ரிக்ஸ் முறைப்படி பதவியேற்று கொண்டார்.

அவர் தனது பதவிக்காலத்தின் முக்கியநடவடிக்கையாக, நாட்டின் அரசியலையே மாற்றியமைக்கும் சட்டம் ஒன்றுக்கு ஒப்புதல் அளித்து உள்ளார். இதன்படி, வெனிசுலாவில் எண்ணெய் உற்பத்தி மற்றும் விற்பனையில் தனியார் முதலீட்டுக்கு ஆதரவளிக்கும் வகையில் புதிய சட்டம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி அதற்கு ஒப்புதல் அளித்து உள்ளார். இதன் மூலம் வெனிசுலா நாட்டின் எண்ணெய் துறையில் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், வெனிசுலாவின் இடைக்கால அதிபர் டெல்சியுடன் பிரதமர் மோடி தொலைபேசி வாயிலாக உரையாடியுள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "வெனிசுலாவின் தற்காலிக அதிபர் டெல்சியுடன் பேசினோம். வரும் ஆண்டுகளில் இந்தியா–வெனிசுலா உறவுகளை புதிய உயரத்திற்கு எடுத்துச் செல்லும் தொலைநோக்குப் பார்வையுடன், அனைத்து துறைகளிலும் எங்கள் இருதரப்பு கூட்டாண்மையை மேலும் ஆழப்படுத்தவும், விரிவுபடுத்தவும் நாங்கள் ஒப்புக்கொண்டோம்" என்று பதிவிட்டுள்ளார்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் 100 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரசு சட்டக் கல்லூரி வளாகக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர். பி. ராஜா, ஒன்றிய முன்னாள் ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப. சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.தமிழரசி, மாங்குடி முத்துராஜா, சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் கா.பொற்கொடி., சட்டத்துறைச் செயலாளர் சி.ஜார்ஜ் அலெக்சாண்டர், சட்டக் கல்வி இயக்குநர் ஜெ. விஜயலட்சுமி, காரைக்குடி – அரசு சட்டக் கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ். முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திமுகவுடன் மல்லுக்கட்டும் காங்கிரஸ் ?

சென்னை, ஜன. 31–

ஒவ்வொரு கட்சியும் புதிதாக உதயமாகும்போது கொள்கை, கோட்பாடு என தனியாக வகுத்து செயல்படத் தொடங்குகின்றன. ஆனால், தேர்தல் என்று வந்துவிட்டால், அதை எல்லாம் ஓரமாக மூட்டை கட்டி வைத்துவிட்டு, அதிக 'சீட்' தரும் கட்சிகளுடன் கூட்டணி அமைத்து செயல்படுவது என்பது அரசியல் வரலாற்றில் எழுதப்படாத விதியாக உள்ளன. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு தமிழ்நாட்டில் 1952–ம் ஆண்டு முதல் சட்டசபை தேர்தல் நடைபெற்று வருகிறது. முதல் 15 ஆண்டுகள் காங்கிரஸ் அசைக்க முடியாத சக்தியாக ஆட்சியில் கோலோச்சி வந்தாலும், 1967–ம் ஆண்டு தி.மு.க. விடம் ஆட்சியை பறிகொடுத்தது. அதன் பிறகு, கடந்த 58 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சியால் மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வரமுடியவில்லை.

தேர்தல் வரும்போது எல்லாம் திராவிட கட்சிகளான தி.மு.க., அ.தி.மு.க. உடனேயே கூட்டணி அமைத்து, அவர்கள் முதுகிலேயே பயணிக்கும் நிலை காங்கிரஸ் கட்சிக்கு உள்ளது. இதனால் ஏற்படும் பாதிப்பு என்ன என்பது கடந்த (2024) நாடாளுமன்ற தேர்தலில் வெளிப்பட்டது.

அந்தத் தேர்தலில் தேசிய கட்சியான காங்கிரஸ் பெற்ற வாக்குகள் 10.68 சதவீதம் ஆகும். ஆனால், மற்றொரு தேசிய கட்சியான பா.ஜ.க. அதைவிட கூடுதலாக, அதாவது 11.24 சதவீத வாக்குகளை பெற்றது. இதில் இருந்தே தமிழ்நாட்டில் காங்கிரஸ் சறுக்கலை சந்திப்பதும், பா.ஜ.க. வளர்ச்சியை நோக்கி செல்வதும் தெள்ளத்தெளிவாக தெரியத் தொடங்கியது.

இதனால், கட்சியின் வளர்ச்சியை கருத்தில் கொண்டே நடைபெற உள்ள சட்டசபை தேர்தலை காங்கிரஸ் கட்சி சந்திக்க நினைக்கிறது. அதனால்தான், கூட்டணிக்கு தலைமை தாங்கும் தி.மு.க.விடம், ஆட்சியில் பங்கு, 41 தொகுதிகள், 2 ராஜ்ய சபா சீட், உள்ளாட்சி தேர்தலில் 20 சதவீத இடம் என்றெல்லாம் கறாராக வலியுறுத்தி வருகிறது.



ஆனால், தி.மு.க.வோ, "இந்தியா கூட்டணியில் வலுவான கட்சியே நாம்தான். நாம் இருப்பதால்தான் மத்தியில் எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தில் காங்கிரஸ் இருக்கிறது" என்று நினைக்கிறது.

இதுபோன்ற நிலையில்தான், ஆட்சியில் பங்கு கேட்கும் காங்கிரஸ் கட்சியிடம் அது முடியாது என்று நேரடியாகவே தி.மு.க. சொல்லிவிட்டது. இருந்தாலும், தமிழக காங்கிரஸ் தலைவர்கள் முதல் அகில இந்திய காங்கிரஸ் தலைவர்கள் வரை இதே கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இதனால், சட்டசபை தேர்தலில் தி.மு.க. மாற்றி யோசிக்க தொடங்கியிருக்கிறது. நாம் கொடுக்கும் தொகுதிகளை வாங்கிக் கொண்டால் காங்கிரஸ் கூட்டணியில் இருக்கட்டும். அல்லது அவர்கள் வெளியேறினாலும் பரவாயில்லை. அதற்கு பதிலாக தே.மு.தி.க., பா.ம.க.வை (டாக்டர் ராமதாஸ் அணி) உள்ளே கொண்டுவந்தால், இழக்கும் வாக்கு சதவீதத்தை ஈடுகட்ட முடியும் என்று தி.மு.க. நம்புகிறது.

இந்த நிலையில், தே.மு.தி.க.விடம் கூட்டணியை இறுதி செய்யும் நிலையில் உள்ள தி.மு.க., பா.ம.க.வுடன் இன்னும் தொடங்கவே இல்லை. இதனால், காத்திருந்து பார்த்த டாக்டர் ராமதாஸ், தி.மு.க.வின் எண்ணம் என்ன என்பதை தெரிந்துகொள்ள, கடந்த சில நாட்களுக்கு முன்பு, "தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொன்ன 159–வது வாக்குறுதி என்னவானது?" என்ற அதிரடி அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அதன்பிறகு, டாக்டர் ராமதாசிடம் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினே போன் மூலம் தொடர்பு கொண்டு பேசியதாக கூறப்படுகிறது. "காங்கிரஸ் கட்சியுடன் முதலில் பேச்சு வார்த்தையை முடித்துக்கொள்கிறோம். அதன்பிறகு உங்களிடம் பேசுகிறோம்" என்று தெரிவித்தாராம். முதல்–அமைச்சரின் வாக்குறுதியை நம்பி டாக்டர் ராமதாசும் காத்து கொண்டிருக்கிறாராம்.

## "பிளாக் பிரைடே"

# ஒரே நாளில் தலைகீழான தங்கம், வெள்ளி!

## 1980–களுக்கு பிறகு நினைத்து பார்க்க முடியாத சரிவு?




புதுடெல்லி, ஜன. 31–

தங்கம் தொடர்ந்து ஏறுமுகத்தில் மட்டுமே இருக்கும் என்று நம்பி யிருந்த முதலீட்டாளர்களுக்கு கடந்த வெள்ளிக்கி ழமை ஒரு பிளாக் பிரைடே (Black Friday) எனலாம். கடந்த சில தசாப்தங்களாக கண்டிராத அளவுக்கு, ஒரே நாளில் தங்கம் விலை மளமளவென சரிந்து கீழே விழுந்திருப்பது ஒட்டு மொத்த சந்தையையும் அதிர வைத்துள்ளது. குறிப்பாக, 1980–களுக்கு பிறகு தங்கம் இத்தனை பெரிய வீழ்ச்சியை சந்திப்பது இதுவே முதல் முறை என புள்ளி விவரங்கள் கூறு கின்றன. தங்கத்தோடு போட்டி போட்டுக்கொண்டு வெள்ளி விலையும் 36% வரை சரிந்துள்ளதால், இது முதலீடு செய்ய கிடைத்த பொற்காலமா? அல்லது சரிவின் ஆரம்பமா? என்ற விவாதங்கள் சமூக வலைதளங்களில் அனல் பறக்கின்றன. நிலைகு லைந்து போயிருக்கும் முதலீட்டாளர்கள் ஒருபுறம் என்றால், நகை வாங்க காத்திருந்தவர்கள் உற்சாகத்தில் உள்ளனர். இந்த அதிரடி மாற்றத்திற்கு பின்னால் இருக்கும் உண்மையான காரணம் என்ன என்பதை பார்ப்போம்.

### வரலாறு காணாத வீழ்ச்சி ஏன்?

கடந்த வெள்ளிக்கிழமை அன்று தங்கம் விலையானது யாரும் எதிர்பாராத விதமாக மிகப்பெரிய அளவிலான சரிவை சந்தித்தது. பலருக்கும் தோன்றலாம், அந்த அளவுக்கு ஏறியிருக்கிறதே என்று. ஆனால் இதுவரை தொடர்ந்து தங்கம் விலையானது அதிகரித்து வந்த சூழலில், அதே அளவுக்கு சரிவைக் கண்டு இருக்கிறதா என்றால் நிச்சயம் இல்லை எனலாம். மொத்தத்தில் கடந்த வெள்ளிக்கிழமையன்று உச்சத்தில் இருக்கும் லாபத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக முதலீட்டாளர்கள் புராபிட் புக்கிங் செய்ததால், தங்கம் விலையானது கிடுகிடு வென வரலாறு காணாத அளவில் சரிவை கண்டது.

வெள்ளியும் அதேபோன்று பெரும் சரிவை கண்டது. இது முதலீட்டாளர்களுக்கு மீண்டும் குறைந்த விலையில் வாங்க கிடைத்த வாய்ப்பா அல்லது இன்னும் குறையுமா என்பது தான் பெரிய கேள்வியே. பியூச்சர் சந்தையில் தங்கத்தின் விலை அவுன்ஸூக்கு 4,700 டாலர்கள் வரையில் சரிவைக் கண்டது. மதிய நேர வர்த்தகத்தில் மீண்டது போல் தெரிந்தாலும், வர்த்தக நேரத்தின் இறுதியில் மீண்டும் விற்பனை அழுத்தமே இருந்தது. குறிப்பாக ஏப்ரல் மாத ஒப்பந்தத்தில் ஒரு அவுன்ஸூக்கு 11.4% அளவுக்கு சரிவைக் கண்டு, வர்த்தக இறுதியில் 4,745 டாலர் என்ற நிலையில் முடிவடைந்தது. 1980–களின் தொடக்கத்திற்கு பிறகு, ஒரே நாளில் ஏற்பட்ட மிகப்பெரிய வீழ்ச்சி இதுவாகும்.

வழக்கம்போல தங்கத்தை விட, வெள்ளி விலையானது மிக மோசமான சரிவை கண்டது. மதிய வர்த்தக நேரத்தில் வெள்ளி ஒரு அவுன்ஸூக்கு 35% சரிவைக் கண்டு, 74 டாலர் என்ற நிலைக்கு சென்றது. பின்னர் சற்றே உயர்ந்தாலும், வர்த்தக முடிவில் 78.53 டாலர் என்ற நிலையில் முடிவடைந்தது. இது 35.9% வீழ்ச்சியாகும். இது வெள்ளியின் சரித்திரத்திலேயே கண்ட மிகப்பெரிய ஒரு நாள் வீழ்ச்சியாகும். இதேபோல் மற்ற உலோகங்களை பொறுத்த வரையில் பல்லேடியம் 15% சரிந்தும், பிளாட்டினம் 17% சரிந்தும் காணப்பட்டது. நடப்பு வார தொடக்கத்தில் தங்கம் விலையானது 5,600 டாலர்கள் என்ற உச்சத்தையும், வெள்ளி விலையானது 121 டாலர் என்ற உச்சத்தையும் எட்டியது குறிப்பிடத்தக்கது. சந்தையின் போக்கை கணிக்கும் முக்கிய தொழில் நுட்பக் குறியீடுகளில் ஒன்றான ஆர்.எஸ்.ஐ, ஏற்கனவே தங்கம் மற்றும் வெள்ளி என இரண்டும் அதிக அளவில் வாங்கப் பட்டிருப்பதை சுட்டிக் காட்டியது. பொதுவாக ஆர்.எஸ்.ஐ 70–ஐ தாண்டினாலே அது அபாயகரமான ஒன்றாக பார்க்கப்படும். ஆனால் தங்கத்தில் ஆர்.எஸ்.ஐ 90–ஐ எட்டியது. இது கடந்த பல தசாப்தங்களில் இல்லாத ஒரு உச்சமாகும். இதனால் ஒரு பெரிய விலை சரிவு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகவும் இருந்தது. அப்படி எனில் சரிவு இனி தொடருமா என பலரும் நினைக்கலாம். இந்த வரலாற்று சிறப்புமிக்க விலை ஏற்றம் முடிவுக்கு வந்துவிட்டது என்று இப்போதே கூறிவிட முடியாது. ஆனால் தற்போது சந்தையின் அடிப்படை பொருளாதார காரணிகளை விட, விலையின் அதிரடி மாற்றங்களே சந்தையை வழிநடத்துகின்றன. அதாவது லாபத்தை எடுக்க நினைக்கும் முதலீட்டாளர்களின் விற்பனை அழுத்தமே தற்போதைய சரிவுக்கு முக்கிய காரணமாகிறது. ஆக தொடர்ந்து சரிவதற்கான சாத்தியக் கூறுகள் குறை வாகவே உள்ள தாகவும் பார்க்கப்படுகிறது. இந்த பெரும் சரிவுக்கு மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன.

1.முதலாவதாக, கெவின் வார்ஷ் ஃபெடரல் ரிசர்வ் தலைவராக நியமிக்கப் பட்டதால் அமெரிக்க டாலர் வலுப்பெற்றது. டாலர் குறியீடு 97ஐ தாண்டியது. வலுவான டாலர் தங்கம், வெள்ளி போன்ற உலோ கங்களுக்கு எப்போதும் எதிராக இருக்கும்.

2. இரண்டாவதாக, தங்கம் விலை சரிவு வெள்ளியை பாதித்தது. வெள்ளி பெரும்பாலும் தங்கத்தின் போக்கை தான் பின்பற்றும், அந்த வகையில் தங்கம் விலை சரிவால், வெள்ளி விலையும் பாதித்துள்ளது.

3.மூன்றாவதாக, முதலீட்டாளர்கள் டாலர் விலை உயர்வு, அமெரிக்க பத்திர சந்தையின் லாபம் உயர்வு ஆகியவை பங்குச் சந்தைக்கும், உலோக சந்தைக்கும் எதிராக மாறியுள்ளது. இதனால் முதலீட்டாளர்கள் கிடைத்த வரையில் லாபம் போதும் என profit booking செய்ய துவங்கிய காரணத்தால் பெரியளவில் தங்கம், வெள்ளி விலை சரிந்துள்ளது.

தற்போது பிரச்சனை என்னவென்றால் அதிகப்படியான விலையில் தங்கம், வெள்ளியை வாங்கிய முதலீட்டாளர்கள் தான் இந்த சரிவால் பெரும் பாதிப்பை அடைந்துள்ளனர். சில மாதங்களுக்கு முன்பு குறைவான விலையில் வாங்கியோர் தொடர்ந்து லாபத்தை பெறும் அளவிலேயே உள்ளனர். இந்த சரிவு உலகளாவிய முதலீட்டாளர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது. வெள்ளி தொ ழில்துறை பயன்பாட்டுக்கும் முதலீட்டுக்கும் பயன்படும் உலோகம். AI, தொழில்நுட்ப துறை பங்குகள் சரிவால் வெள்ளி தேவை குறைந்தது. சந்தை ஆய்வாளர்கள் இதன் விலை ரூ.3 லட்சத்திற்கு கீழே திரும்பலாம் என்று எச்சரிக்கின்றனர். ஆனால் நீண்டகாலத்தில் விநியோக பற்றாக்குறை, புவிசார் அபாயங்கள் தொடர்ந்தால் மீண்டும் உயரலாம். எனவே தங்கம், வெள்ளி விலை உயர்வதற்கான வாய்ப்பு இன்னும் அதிகமாகவே உள்ளது. இந்தியாவில் MCX சந்தையில் இந்த சரிவு நகை வாங்குப வர்களுக்கு சற்று நிவார ணமாக அமைந்துள்ளது. ஆனால் குறுகிய கால ஏற்ற இறக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் முதலீட்டாளர்கள் கவனமாக இருக்க வேண்டும். நீண்டகால முதலீட்டாளர்கள் இந்த சரிவை வாங்கும் வாய்ப்பாக பார்க்கலாம்.

## நிலுவைத் தொகையுடன் கிடைக்கப் போகும் ரூ.1,000 உரிமைத்தொகை..!!



சென்னை, ஜன. 31–

தமிழக அரசின் 'கலைஞர் மகளிர் உரிமைத்தொகை' திட்டத்தில், தொடக்கத்தில் விண்ணப்பித்துத் தொழில்நுட்பக் காரணங்களாலோ அல்லது பிற தரவுப் பிழைகளாலோ நிராகரிக்கப்பட்ட பெண்களுக்குத் தற்போது ஒரு முக்கிய விடியல் பிறந்துள்ளது. தகுதியிருந்தும் தங்களுக்கு இந்த உத வித்தொகை கிடைக்க வில்லை என கருதிய பெண்கள், அரசின் kmut.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக தங்களின் நியாயமான கோரிக்கைகளை மேல்முறையீடாகப் பதிவு செய்திருந்தனர். ஆயிரக்கணக்கில் குவிந்த இந்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் தரப்பிலிருந்து அதிகாரிகளுக்கு கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, அந்தந்த மாவட்டங்களில் உள்ள வருவாய் கோட்டாட்சியர்கள் (RDO) தலைமையிலான குழுவினர், இணையதளம் மூலம் பெறப்பட்ட மேல்முறையீட்டு மனுக்கள் மீது நேரடி கள ஆய்வை தற்போது தொடங்கியுள்ளனர். இந்த ஆய்வின் போது, விண்ணப்பதா ரர்களின் உண்மையான பொருளாதாரச் சூழல், வருமான வரி விவரங்கள் மற்றும் பிற தகுதிகள் மிக நுணுக்கமாக மீண்டும் ஒரு முறை சரிபார்க்கப்படு கின்றன. தகுதி வாய்ந்த ஒரு பெண் கூட விடுபட்டுவிடக் கூடாது என்பதில் அரசு உறுதியாக இருப்பதால், அதிகாரிகள் களத்திற்குச் சென்று நேரடியாகத் தரவு களைச் சேகரித்து வருகின்றனர். இந்த மறுபரிசீலனை பணிகளின் முடிவில், தகுதி யுள்ளவர்களாக கண்டறியப்படும் பயனாளிகளுக்கு மகிழ்ச்சியான செய்தி காத்திருக்கிறது. அவர்க ளுக்கு மாதம் ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கப்படுவதோடு மட்டுமல்லாமல், அவர்களின் மனு நிலுவையில் இருந்த காலத்திற்கான நிலுவைத் தொகையும் சேர்த்து வழங்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

## அடுத்த கட்ட பிரசாரத்திற்கு தயாராகும் தவெக தலைவர் ஜோசப் விஜய்!



சென்னை, ஜன. 31–

வேலூரில் பிப் 2–வது வாரத்தில் தொடங்குவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்காக தவெக கட்சியினர் அனுமதி கோரியுள்ளனர்.

# தலையங்கம்

மதுரை மணி

சனிக்கிழமை 31.01.2026

விசுவாவசு தமிழ் வருடம்

தை மாதம் 17-ம் தேதி

## வாகனம் ஓட்டும் அனைவருக்கும் வேண்டுகோள்



1. இந்த பூமியில் மீண்டும் பிறக்க நம் தாயின் வயிற்றில் 9 மாதங்கள் காத்திருக்க வேண்டும்.
2. நடக்க 2 ஆண்டுகள்.
3. பள்ளிக்குச் செல்ல 3 ஆண்டுகள்,
4. வாக்களிக்க 18 ஆண்டுகள்,
5. வேலை கிடைக்க 25 ஆண்டுகள்,
6. திருமணம் செய்து கொள்ள 25 முதல் 30 ஆண்டுகள்...

பல சந்தர்ப்பங்களில் நாம் காத்திருக்கிறோம் (காத்திருக்கிறோம்). ஆனால்.... வாகனங்களை முந்திச் செல்லும்போது... வாகனம் ஓட்டும்போது, 30 வினாடிகள் கூட நிறுத்த முடியாது. நாம் தவறு செய்து விபத்தில் சிக்கினால், மணிக்கணக்கில், நாட்கள், வாரங்கள், மாதங்கள், தேவைப்பட்டால் ஆண்டுகள் மருத்துவமனையில் இருப்போம். சில வினாடிகள் கவனக்குறைவால் ஏற்படும் பயங்கரமான விளைவுகளைப் பற்றி யோசித்துப் பாருங்கள். முன்னால் இருப்பவர்கள் செல்லட்டும்... பின்னால் இருப்பவர்கள் வசதியாக செல்லட்டும்.... போக்குவரத்து விதிகளை சரியான வேகத்தில், சரியான திசையில் பின்பற்றுங்கள்... தலைக்கவசம் அணியுங்கள்... வாகனங்களை கட்டுப்பாட்டில் வைத்திருங்கள். மேலும் உங்கள் இலக்கை பாதுகாப்பாக அடையுங்கள். உங்கள் குடும்ப உறுப்பினர்களும் குழந்தைகளும் உங்களுக்காக உங்கள் வீட்டில் காத்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்... முடிந்தால், இந்த செய்தியை உங்கள் நண்பர்களுக்கு அனுப்புங்கள்... கவனமாக இருங்கள்...

# தாக்கல் ஆகும் பட்ஜெட்டில் நடுத்தர வர்க்கத்திற்கு காத்திருக்கும் ஜாக்பாட்..?

டெல்லி, ஜன. 31–

நாட்டின் கண்கள் அனைத்தும் தற்போது டெல்லியை நோக்கித் திரும்பியுள்ளன. மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், 2026–27 ஆம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை பிப்ரவரி 1 ல்,காலை 11 மணிக்குத் தாக்கல் செய்கிறார். வழக்கமாக விடுமுறை நாட்களில் பட்ஜெட் தாக்கல் செய்யும் நடை முறை இல்லை என்றாலும், இந்த ஆண்டு பிப்ரவரி 1 ஞாயிற்றுக்கிழமை வந்தபோதிலும் பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது.




இதன் காரணமாக, முதலீட்டாளர்களின் வசதிக்காக பங்குச் சந்தைகளும் நாளை வழக்கம் போல் செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதால், இப்போதே பரபரப்பு தொற்றிக்கொண்டுள்ளது. இந்த பட்ஜெட்டில் நடுத்தர வர்க்கத்தினர் பெரிதும் எதிர்பார்ப்பது வருமான வரிச் சலுகைகளைத்தான். கடந்த ஆண்டு 12 லட்சம் ரூபாய் வரை வருமானம் உள்ள வர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்ட நிலையில், இந்த ஆண்டு 'ஸ்டாண்டர்ட் டிடக்ஷன்' (Standard Deduction) தொகையை 75 ஆயிரத்திலிருந்து 1 லட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து ள்ளது. மேலும், தம்பதிகள் இணைந்து வருமான வரிக்க ணக்கை தாக்கல் செய்யும் 'கப்பிள் டேக்ஸ்' (Couple Tax) முறை முதன்மு தலாக அறிமுக மாகலாம் என எதிர்பார்க்கப்படு கிறது. இது தவிர, விண்ணைத் தொடும் தங்கம் விலையை கட்டுப்படுத்த இறக்குமதி வரியில் கணிசமான குறைப்பு இருக்குமா என்பதும் இல்லத்தரசிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது. விவசாயத்தைப் பொறுத்தவரை, பிரதமரின் கிசான் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஆண்டு நிதியுதவி 6,000 ரூபாயில் இருந்து 8,000 ஆயிரம் ரூபாய் அல்லது 9,000 ரூபாயாக உயர்த்தப்பட அதிக வாய்ப்புள்ளதாக தெரிகிறது. 'பூமித்தாய்' திட்டத்தின் கீழ் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கக் கூடுதல் மானியங்களும், ஊக்கத்தொகைகளும் அறிவிக்கப்படலாம். தமிழகத்தைப் பொறுத்தவரை, சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கான பிரத்யேக நிதி ஒதுக்கீடு, சென்னை – பெங்களூரு எக்ஸ்பிரஸ்வே மற்றும் கிழக்கு கடற்கரைச் சாலை விரிவாக்கப் பணிகளுக்கான அறிவிப்புகள் வெளியாகலாம் என தெரிகிறது. குறிப்பாக, ஒசூர் மின்னணு உற்பத்தி மண்டலம் மற்றும் குலசேகரப்பட்டினம் இஸ்ரோ விண்வெளி ஏவுதளப்பணிகளுக்காக கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால், அது தென் தமிழகத்தின் பொருளாதாரத்தையே புரட்டிப்போடும் காரணியாக அமையும்.

மறுபுறம், தேர்தல் அரசியல் இந்த பட்ஜெட்டில் எதிரொலிக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. தமிழகம், மேற்கு வங்கம், கேரளா உள்ளிட்ட சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களுக்குச் சிறப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட வாய்ப்புள்ளது. கடந்த பட்ஜெட்டில் பீகாருக்குக் கிடைத்தது போன்ற பிரம்மாண்டமான நிதித் தொகுப்பு, இம்முறை கிழக்கு இந்திய மாநிலங்களுக்கு கிடைக்கலாம் என தெரிகிறது. கடந்த ஆண்டு உரையின் போது தமிழகத்தின் பெயர் விடுபட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், இந்த முறை நிதியமைச்சர் தமிழகத்திற்கான திட்டங்களை எவ்வாறு முன்னிலைப்படுத்துகிறார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# பாம்பன் தூக்குப்பாலம் அகற்றும் பணி; ராட்சத கிரேன் கவிழ்ந்து விபத்து: சீரமைப்பு பணிகள் தீவிரம்!




பாம்பன், ஜன. 31–

ராமேஸ்வரம் தீவை தமிழகத்துடன் இணைக்கும் முக்கிய இணைப்பாக பல ஆண்டுகளாக பாம்பன் பழைய ரயில் இரும்பு தூக்குப்பாலத்தை அகற்ற இந்திய ரயில்வே துறை முடிவு செய்து டெண்டர் கோரியது. டெல்லியை சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்று, 2.53 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நான்கு மாத கால அவகாசத்தில் பாலம் அகற்றும் பணிக்கான ஒப்பந்தத்தை பெற்றது. பிப்ரவரி முதல் வாரத்தில் அகற்றும் பணி தொடங்க திட்டமிடப்பட்ட்டு இருந்த்து.

இந்நிலையில், 31.01. 2026,காலை ராட்சத கிரேன் ஒன்று பாம்பன் பகுதிக்கு கொண்டு வரப்பட்டு, மண்டபம் பூங்கா எதிரே பழைய ரயில் பாலத்தின் தண்டவாளம் அருகே நிறுத்தப்பட்டது. அப்போது பாரம் தாங்க முடியாமல் அந்த கிரேன் வடக்கு பக்கமாக தலைக்குப்புற கவிழ்ந்து விழுந்து விபத்து ஏற்பட்டது. கிரேன் தெற்கு பக்கமாக புதிய ரயில் பாலத்தின் மீது விழுந்திருந்தால், பாலம் சேதமடைந்து ரயில் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலை ஏற்பட்டிருக்கும். நல்வாய்ப்பாக விபத்து வடக்கு பக்கம் ஏற்பட்டதால், பெரிய பாதிப்பு தவிர்க்கப்பட்டது. விபத்துக்கு ள்ளான கிரேனை மீட்கும் பணியில் ரயில்வே ஊழிய ர்கள் தீவிர மாக ஈடுபட்டு வருகின்றனர். இதே நேரத்தில், நூற்றாண்டு பழமையான பாம்பன் இரும்பு தூக்குப்பாலத்தை பாதுகாப்பான முறையில், சேதமின்றி அகற்றி, அதனை வேறு இடத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கும் வகையில் கண்காட்சி பொருளாக மாற்ற வேண்டும் என பாம்பன் பகுதி பொது மக்கள் கோரிக்கை வைத்து ள்ளனர். பழமையான பாம்பன் இரும்பு தூக்குப்பா லத்தை அகற்றும் பணியின் முதல் நாளிலேயே ராட்சத கிரேன் விபத்துக்குள்ளானது, ரயில்வே ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள புகைப்பட கண்காட்சி பொதுமக்கள் பார்வையிட்டனர்.




# ஆண் நண்பர்களை அதிகம் கொண்டிருக்கும் பெண்களின் ராசிகள்!



வேத ஜோதிட நிபுணர்களின் கூற்றுப்படி ஒரு சில ராசியில் பிறந்த பெண்கள், தங்கள் நண்பர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். நட்புறவை வளர்க்கும் விஷயங்களில் கவனம் செலத்துகின்றனர். அதிலும் குறிப்பாக, எதிர் பாலினத்தவருடன் (ஆண்களுடன்) நட்பை வளர்க்க முயற்சி செய்கின்றனர். தன் நண்பர்கள் பட்டியலில் ஆண்களுக்கு அதிகளவு இடத்தை அளிக்கும் பெண்கள் பிறக்கும் ராசிகள் என்ன? நட்புறவில் இவர்களின் பங்களிப்பு என்ன? என்பது குறித்து சற்று விரிவாக நாம் காணலாம்!

**மேஷம்!**



மேஷ ராசி கொண்ட பெண்கள் அடிப்படையில் தைரியசாலிகள்; தன்னம்பிக்கை கொண்டவர்கள். ஆண்களை பார்க்கும் போது மற்ற பெண்களிடம் பொதுவாக காணப்படும் தயக்கம், அச்சம் போன்றவை இவர்களிடம் குறைவாகவே உள்ளது. இதன் விளைவாக, ஆண்களிடம் இயல்பாக பழகுவதோடு – அவர்களுடன் நெருக்கமான ஒரு நட்புறவையும் பராமரிக்கின்றனர்.

சாகசம் நிறைந்த விஷயங்களில் நாட்டம் கொண்ட இந்த மேஷ ராசி பெண்கள், தங்கள் நண்பர்களும் அவ்வாரே இருக்க வேண்டும் என விரும்புகின்றனர். மேஷ ராசி பெண்கள் எதிர்பார்க்கும் இந்த சிறப்பு பண்புகள் பெண்களை காட்டிலும், ஆண்களிடமே அதிகம் காணப்படுகிறது.

இதன் விளைவாகவும் அவர்களின் நண்பர்கள் பட்டியலில் ஆண்களின் எண்ணிக்கை சற்று அதிகமாக இருக்கிறது. மேஷ ராசியில் பிறந்தவர்களுக்கு பெண் தோழிகளும் இருப்பார்கள்; ஆனால், அவர்களுடனான உறவு அந்தளவுக்கு பிரகாசமாக இருப்பது இல்லை என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்!

**சிம்மம்!**




சிம்ம ராசியில் பிறந்தவர்கள் பிறவி தலைவர்கள். தலைமைப் பண்புக்கு பெயர் பெற்றவர்கள், ஆதிக்கம் செலுத்தக் கூடியவர்கள். சிம்ம ராசியில் பிறந்த பெண்களிடம் காணப்படும் இந்த பண்புகள், பெரும்பான்மை பெண்களுக்கு பிடிப்பது இல்லை. மற்ற பெண்களுடன் வாக்குவாதங்கள், வழக்குகளை கொண்டு வருகிறது.

அதேநேரம், ஆண்களுடன் பரஸ்பர புரிதலுடன் கூடிய ஒரு நட்புறவை பராமரிக்க உதவி செய்கிறது. சூரியனை ஆளும் கிரகமாக கொண்ட சிம்ம ராசி பெண்கள், ஆதிக்கம் செலுத்த விரும்புகின்றனர். தொழில் வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை இரண்டிலும் ஆதிக்கம் செலுத்த விரும்புகின்றனர்.

மேலும் தங்களின் விருப்பங்களை பூர்த்தி செய்ய, ஆளுமை மிக்க ஆண்களுடன் பழகுவது சரியான ஒரு தேர்வாக இருக்கும் எனவும் நம்புகின்றனர். இதன் விளைவாகவே இவர்களுக்கு பெண் நண்பர்களை காட்டிலும், ஆண் நண்பர்கள் அதிகம் இருக்கின்றனர்.

**விருச்சிகம்!**




விருச்சிக ராசி கொண்டவர்கள் அடிப்படையில் நண்பர்கள் எண்ணிக்கை அதிகம் கொண்டிருக்கும் நபர்கள் ஆவர். முகம் அறியாத புதியவர்களுடனும் விரைவில் நட்பு பாராட்டும் குணத்திற்கு சொந்தக்காரர்கள். விருச்சிக ராசியினருடன் பழகுவது, இனிமையான தருணங்களை கொண்டுவரும் – மன அழுத்தத்தை குறைக்கும், மகிழ்ச்சியான விஷயங்களை கொண்டு வரும்.

ஆண் – பெண் என பாரபட்சம் பார்க்காது தனது நட்புறவை வளர்க்கும் ஒரு ராசியாக இந்த விருச்சிக ராசி இருக்கும் நிலையிலும், விருச்சிக ராசி பெண்களுக்கு பெண் தோழிகளை காட்டிலும் ஆண் நண்பர்களே அதிகம் இருப்பதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

காரணம், அவர்களின் உணர்வுகளை பகிர்ந்துக் கொள்ள சௌகரியமாக இருக்கும் நபர்களில் பெண்களை காட்டிலும் ஆண்கள் முன்னுரிமை பெறுவதாக நம்பப்படுகிறது. மேலும், விருச்சிக ராசி கொண்ட பெண்களின்பொறுமைக்கு ஒத்துபோகும் பட்டியலில் ஆண்களே முக்கியத்துவம் பெறுகின்றனர்!

**தனுசு!**

தனுசு ராசியில் பிறந்தவர்கள் உண்மையில் சாகசத்தை விரும்புபவர்கள், அதிகம் பயணிப்பவர்கள், எண்ணற்ற நண்பர்கள் எண்ணிக்கை கொண்டிருப்பவர்கள். புதியவர்களுடன் விரைவில் நட்பு பாராட்டும் குணம் கொண்ட இவர்களுக்கு, பெண்களை காட்டிலும் ஆண்களே அதிக எண்ணிக்கையில் நண்பராக இருக்கின்றனர். காரணம், தனுசு ராசியினரிடம் காணப்படும் சாகச உணர்வு.



பெரும்பாலும் மற்ற ராசி பெண்கள் இந்த தனுசு ராசி பெண்களின் வேகத்திற்கு ஈடு கொடுப்பது இல்லை. அதேநேரம், தனுசு ராசி கொண்ட மற்ற பெண்களுடனும் இவர்களின் உறவு அவ்வளவு இணக்கமாக செல்வது இல்லை. பெரும்பாலும் வாக்குவாதங்களுடன் செல்லும் இந்த உறவுகளுக்கு மத்தியில், ஆண்களுடன் இவர்கள் இனிமையான ஒரு நட்புறவை கொண்டிருப்பதாக நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

தனுசு ராசி கொண்ட பெண்களின் காணப்படும் மற்றும் ஒரு சுவாரஸ்யமான விஷயங்களில் ஒன்று, அவர்களின் நட்பு வட்டம் எனப்படுவது அவர்களின் பள்ளி பருவத்தில் இருந்து வளர தொடங்குகிறது!


**கும்பம்!**

கும்ப ராசியில் பிறந்தவர்கள் இயல்பாகவே தைரியமானவர்கள். தனக்கு தேவையான விஷயங்களை யார் உதவியும் இன்றி, தானே செய்துக்கொள்ளும் திறன் படைத்தவர்கள், மன வலிமை கொண்டவர்கள்.



கும்ப ராசி பெண்களிடம் காணப்படும் இந்த தனித்துவமான பண்பு, மற்ற பெண்களிடம் இருந்து அவர்களை வேறுபடுத்தி காண்பிக்கிறது.

இதன் தாக்கம், பெண்களை காட்டிலும், ஆண்களுடன் அதிகம் பழக முயற்சிக்கின்றனர். தனது மனதில் இருக்கும் விருப்பங்கள், கருத்துக்களை வெளிப்படையாக கூறுவதில் பெண்களிடம் காணப்படும் சௌகரியத்தை காட்டிலும் ஆண்களிடம் சௌகரியமாக உணர்கின்றனர். மேலும் தன் மனதில் இருக்கும் குழப்பங்கள் மற்றும் கேள்விகளுக்கு பதில் கிடைக்கும் ஒரு இடமாகவும் ஆண் நண்பர்களை கருதுகின்றனர். இதன் காரணமாகவே இவர்கள் பெண் நண்பர்களை காட்டிலும் ஆண் நண்பர்களை அதிகம் கொண்டிருக்கின்றனர்!



## சினிமா துளிகள்..!

# ரஜினியின் பயோபிக் படம் வரப்போகுது..!




சமீபத்தில், ரஜினிகாந்தின் மகள் ஐஸ்வர்யா ரஜினிகாந்த், அவரது ரசிகர்களுக்கு ஒரு செய்தியைத் தெரிவித்துள்ளார்.

தனது தந்தையின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு பயோபிக் படத்தை உருவாக்குவதாகவும், அதற்கான பணிகள் ஏற்கனவே தொடங்கிவிட்டதாகவும் கூறியுள்ளார். அந்தப் படம் வெளியானால் உலகளவில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தும் என்றும், ரஜினிகாந்தின் வாழ்க்கை வரலாறு இளைஞர்களுக்கு ஒரு நல்ல உத்வேகமாக அமையும் என்றும் கூறினார்.

ஆனால் இந்தப் படத்தை யார் இயக்கப் போகிறார்கள்? ரஜினிகாந்த் கதாபாத்திரத்தில் யார் நடிக்கப் போகிறார்கள் என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை.. இருப்பினும், இந்த பயோபிக் படம் குறித்த செய்தி ரஜினிகாந்த் ரசிகர்கள் மத்தியில் புதிய உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. ரஜினிகாந்தின் வாழ்க்கையை வெள்ளித்திரையில் காண அனைவரும் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

ரஜினிகாந்திற்கு 75 வயதானாலும் கூட ரஜினிகாந்த் தற்போது கூட பல இளம் ஹீரோக்களுக்கு டஃப் கொடுக்கும் வகையில் தொடர்ச்சியாகப் படங்களில் நடித்து வருகிறார். சமீபத்தில் 'கூலி' என்ற படத்தில் நடித்த அவர், தற்போது நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் 'ஜெயிலர் 2' திரைப்படத்தில் நடித்து வருகிறார். இந்த படப்பிடிப்புப் பணிகளில் பிஸியாக இருக்கும்போதே, கமல்ஹாசனின் தயாரிப்பில் 'தலைவர் 173' என்ற தற்காலிகப் பெயரிடப்பட்ட மற்றொரு படத்திலும் நடித்து வருகிறார். இந்த படத்தை சிபி சக்ரவர்த்தி இயக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது..

# விஷாலின் 'புருஷன்' படப்பிடிப்பு திடீர் ரத்து



சுந்தர்.சி, விஷால் மீண்டும் இணையும் படம் 'புருஷன்'. இந்தப் படத்தின் படப்பிடிப்பு பிப்.2–ம் தேதி கொல்கத்தாவில் தொடங்க இருந்தது. இதற்காகச் சுந்தர்.சி, விஷால் உள்ளிட்ட படக்குழுவினர் இன்று அங்கு செல்ல இருந்தனர். இந்நிலையில் இப்படத்தின் படப்பிடிப்பு திடீரென தள்ளி வைக்கப்பட்டுள்ளது. சுந்தர். சி–க்கு உடல்நிலை சரியில்லாததால்படப்பிடிப்பு தள்ளி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.


# முக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சி

## திருநெல்வேலி மாவட்டம் - 627 601

ந.க.எண். அ1/33/2026 நாள்: 30.01.2026

**வருடாந்திர ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு**

திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் பேரூராட்சியில் 2026–27ஆம் நிதியாண்டிற்கு தேவையான. பொது சுகாதார சாமான்கள், தளவ சாமான்கள், குடிநீர் திட்ட உதிரி சாமான்கள், தெருவிளக்கு உதிரி சாமான்கள் விநியோகம் செய்தல், கணினிகள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்குதல், சுயஉதவிக்குழு/தனியார் தொண்டு நிறுவனம் மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் மேற்கொள்ளுதல், குடிநீர்த்திட்ட விநியோக குழாய்கள், மின்மோட்டார்கள் பழுது நீக்கம் செய்தல், போன்ற பணிகள் மேற்கொள்ள தகுதியான நிறுவனங்களிடமிருந்தும்/தகுதியான சுயஉதவிக் குழுவினரிடமிருந்தும் /தனியார் தொண்டு நிறுவனத்திடமிருந்தும் தகுதியான நபர்களிடமிருந்தும் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மாலை 16.02.2026 நேரடியாகவோ அல்லது இணையதளம் மூலமாகவோ கோரப்படுகிறது.

இது குறித்த கூடுதல் விவரங்களை https://tntenders.gov.in என்ற இணையதளத்திலோ அல்லது அலுவலக விளம்பர பலகையிலோ அல்லது அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் நேரில் கேட்டும் தெரிந்து கொள்ளலாம்.


**ஒம்/-.எல்.ராதா தலைவர்,**
தலைவர்,
தேர்வுநிலை பேரூராட்சி
முக்கூடல்.

**ஒம்/.சு.இராஜநம்பிகிருஷ்ணன்,**
செயல் அலுவலர்,
தேர்வுநிலை பேரூராட்சி
முக்கூடல்–627 601.

வெ.ஆ.எண்: 14/2026/ செ.ம.தொ.அ/ திலி. நாள்: 30.01.26.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்" "சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"


# ஆண்டிபட்டி பேரூராட்சி மன்ற கூட்டம்



ஆண்டிபட்டி, ஜன. 31–

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சி அலுவலகத்தில், மன்ற உறுப்பினர்களின் மாதாந்திர சாதாரண கூட்டம் நடைபெற்றது. இதில் பேரூராட்சி மன்றத் தலைவர் பொன்.சந்திரகலா தலைமை வகித்தார். துணைத் தலைவர் ஜோதி முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில், ஆண்டிபட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட 18 வார்டுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் இனிவரும் காலங்களில் தொடங்கப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட திமுக அதிமுக மற்றும் பல்வேறு கட்சியை சேர்ந்த வார்டு உறுப்பினர்கள், தங்கள் பகுதிகளில் நிலவும் குடிநீர் தட்டுப்பாடு, தெருவிளக்கு வசதி, சாலை மேம்பாடு மற்றும் சாக்கடை கால்வாய் சீரமைப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து கோரிக்கைகளை முன்வைத்தனர். இதனைத் தொடர்ந்து, பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளைத் தொடங்குவது என்றும், பேரூராட்சி பகுதிகளில் சுகாதாரப் பணிகளைத் தீவிரப்படுத்துவது என்றும் ஒருமனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் பேரூராட்சி அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் வார்டு கவுன்சிலர்கள் பாலமுருகன், முத்துக்குமார் உள்பட பெண் கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.




## உடலில் இந்த சிறிய அறிகுறிகள் இருக்கா..? கவனம்..!



ஒவ்வொரு ஆண்டும், உலகளவில் மில்லியன் கணக்கான புதிய புற்றுநோய் பாதிப்புகள் பதிவு செய்யப்படுகின்றன. இந்த வழக்குகளில் பல தாமதமாகவே உறுதி செய்யப்படுவதால், சரியான நேரத்தில் சிகிச்சை கிடைக்காததால் பல உயிர்கள் இழக்கப்படுகின்றன. மேலும், சமீப காலங்களில் புற்றுநோய் பாதிப்புகள், புற்றுநோயின் வகைகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருப்பது கவலைக்குரிய விஷயமாகும்.

இருப்பினும், இது ஒரே இரவில் வரும் நோய் அல்ல. இது மெதுவாக வளர்ந்து, நீண்ட காலத்திற்கு முன்பே பல எச்சரிக்கை அறிகுறிகளைக் காட்டுகிறது. அப்படியிருக்க, புற்றுநோய் ஏன் ஆரம்பத்திலேயே கண்டறியப்படுவதில்லை? உடலில் காணப்படும் எச்சரிக்கை அறிகுறிகள் என்னென்ன? அதை ஆரம்பத்திலேயே கண்டறிய என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

எச்சரிக்கை அறிகுறிகள்: ஹீமோகுளோபின் அளவில் திடீர் சரிவு ஏற்படுவது புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகளில் ஒன்றாகும். தெளிவான காரணம் இல்லாமல் ஏற்படும் இரத்த சோகை, சில வகை புற்றுநோய்களின் ஆரம்ப எச்சரிக்கை அறிகுறியாக இருக்கலாம். மேலும், நிற்காத எடை இழப்பு அல்லது எடை அதிகரிப்பையும் புறக்கணிக்க வேண்டாம்.

உணவுப் பழக்கம், உடற்பயிற்சி அல்லது வாழ்க்கை முறையில் எந்த மாற்றமும் இல்லாமல் எடை குறைந்தால், அது குறித்து சந்தேகப்பட வேண்டும். தொடர்ச்சியான, விளக்க முடியாத எடை இழப்பு பெரும்பாலும் புற்றுநோயின் ஆரம்ப நிலைகளில் காணப்படுகிறது. மற்ற மருத்துவ நிலைகளும் எடை இழப்பை ஏற்படுத்தலாம். எனவே, சரியான நோயறிதல் அவசியம்.

இவையும் கூட, உங்கள் உடல் எப்போதும் பலவீனமாகவும் சோர்வாகவும் இருப்பதை நீங்கள் கவனித்தால், நீங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். உடல் உழைப்பு இல்லாமல் பலவீனமாகவும் சோர்வாகவும் உணர்வது, உடலுக்குள் ஏதோ தவறு இருக்கிறது என்பதற்கான அறிகுறியாகும். தொடர்ச்சியான சோர்வு புற்றுநோய் மற்றும் பிற தீவிர உடல்நலப் பிரச்சனைகளுடன் தொடர்புடையது.

தெளிவான காரணம் இல்லாமல் பலவீனம் நீடித்தால், மருத்துவரை அணுகுவது நல்லது. புற்றுநோயின் ஆரம்ப எச்சரிக்கை அறிகுறிகளில் ஒன்று தோலில் ஏற்படும் அசாதாரண மாற்றங்கள் ஆகும். தோல் மாற்றங்கள் உள் உடல்நலப் பிரச்சனைகளைக் குறிக்கின்றன. மச்சங்களின் அளவு, தோல் நிறம் அல்லது வடிவத்தில் ஏற்படும் மாற்றங்கள், மற்றும் விரைவாக ஆறாத காயங்கள் ஆகியவை தோல் புற்றுநோயைக் குறிக்கின்றன என்று வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

கண்டறிவதில் உள்ள சிக்கல் என்னவென்றால், புற்றுநோய் ஒரு ஆபத்தான நோய். துரதிர்ஷ்டவசமாக, பலருக்கு தங்களுக்கு புற்றுநோயின் அறிகுறிகள் இருப்பது தெரிவதில்லை. அப்படித் தெரிந்தாலும், அவர்கள் அவற்றை புறக்கணிக்கிறார்கள் அல்லது வேறு ஏதேனும் காரணம் என்று கருதி, நோயறிதலைத் தாமதப்படுத்துகிறார்கள்.

புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகள் குறித்த விழிப்புணர்வு இல்லாததும், உடல் ஆரோக்கியத்தை தீவிரமாக எடுத்துக்கொள்ளாததும் இந்த நோயை மேலும் மோசமாக்குகின்றன. புற்றுநோயின் தெளிவான அறிகுறிகளைப் புரிந்து கொள்ளாவிட்டால், அதன் அச்சுறுத்தலைக் குறைக்க முடியாது என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

என்ன செய்ய வேண்டும்? புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிய சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஒருவர் வருடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை முழு உடல்நலப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால், அதை ஒருபோதும் அலட்சியப்படுத்தக்கூடாது.

புற்றுநோய்க்கான முக்கிய ஆபத்துக் காரணிகளான புகைபிடித்தல் மற்றும் மது அருந்துவதை தவிர்க்க வேண்டும். சமச்சீரான உணவைப் பின்பற்றுங்கள், உடல் ரீதியாக சுறுசுறுப்பாக இருங்கள், மற்றும் நீண்ட நேரம் உட்கார்ந்திருக்கும் பழக்கத்தைக் கட்டுப்படுத்துங்கள். மேலும், உங்கள் உடலில் ஏதேனும் அசாதாரணமான அல்லது நீடித்த அறிகுறிகளை நீங்கள் கவனித்தால், உடனடியாக ஒரு நிபுணரை அணுக வேண்டும்.



பழனியில், திண்டுக்கல் மேற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி புதிய மாவட்ட தலைவர் சாமிநாதன் அவர்களின் அறிமுக கூட்டம் நடந்தது. இந்நிகழ்ச்சியில் அவருக்கு காமராஜ் தேசிய பேரவை சார்பாக வரவேற்பு அளிக்கப்பட்டது. நகரத் தலைவர் முத்துவிஜயன், மாவட்டத் துணைத் தலைவர் முருகானந்தம், மண்டல தலைவர் வீரமணி, காமராஜ் தேசிய பேரவை பாப்புச்சாமி, முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் சுந்தர், நகர இளைஞரணி தலைவர் பாலகுமார், சிறுபான்மை பிரிவு முகமது அலி, ராமநாத கிருஷ்ணன், நகர் மன்ற உறுப்பினர் பத்மினி முருகானந்தம், நகர் வட்டார சார்பில் திரளாக கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பழனி to ஈரோடு ரயில்வே திட்டத்தையும், மகாத்மா காந்தி 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தை எந்த மாற்றமும் இல்லாமல் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## த.வெ.க. சார்பில் தேர்தல் பிரசார மாநில சட்டப் பாதுகாப்பு குழு அமைப்பு!



சென்னை, ஜன 31–

தமிழக சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் தீவிரமாக தயாராகி வருகிறது. இந்த நிலையில், சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு த.வெ.க. தேர்தல் பிரசார மாநில சட்டப் பாதுகாப்பு குழுவை அமைத்து அக்கட்சியின் தலைவர் விஜய் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;– "வருகின்ற சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, 'சட்டமன்ற தேர்தல் பிரசார மாநில சட்டப் பாதுகாப்பு குழு', பின்வரும் வகையில் நியமிக்கப்படுகிறது.

1. CTR.நிர்மல் குமார் B.E., LLB., MA Criminology and Police Admins., இணை பொதுச் செயலாளர்
2. P.வெங்கடராமணன் M.Com., MBA(Finance), ML., பொருளாளர்
3. S.அறிவழகன் BA., BL., மாநில ஒருங்கிணைப்பாளர் சட்ட வழக்கறிஞர் பிரிவு
4. S.குமரேசன் BA., BL., ML., மாநில ஒருங்கிணைப்பாளர் சட்ட ஆலோசனை பிரிவு
5. K.சிவசண்முகம் BSc. BL., மாநில இணை ஒருங்கிணைப்பாளர் சட்ட ஆலோசனை பிரிவு
6. P.பாண்டி (எ) K.P பாண்டியன் BA. BL., மாநில இணை ஒருங்கிணைப்பாளர் சட்ட ஆலோசனை பிரிவு
7. R.S.இந்திரா தன்ராஜ் B A., M.L., மாநில இணை ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் பிரிவு
8. R.சக்ரவர்த்தி B.Com, B.L., M.B.A, D.LL., D.CY.L., மாநில இணை ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் பிரிவு
9. R.செல்வபாரதி M.A., M.Phil, M.Sc (Yoga) LLB., மாநில இணை ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் பிரிவு
10. S.A.வெலிங்டன் M.A, B.ED, BL, D.LITT., மாநில இணை ஒருங்கிணைப்பாளர் சட்ட ஆலோசனை பிரிவு
11. M.தன்ராஜ் B.A, B.L., மாநில இணை ஒருங்கிணைப்பாளர் சட்ட ஆலோசனை பிரிவு
12. J.விஜயகுமார் B.Sc., ML (Const Law)., ML., (Int Law)., மாநில இணை ஒருங்கிணைப்பாளர் சட்ட ஆலோசனை பிரிவு
13. ரேவந்த் சரண் BA, BL., (HON) LLM (London)., சென்னை மண்டல ஒருங்கிணைப்பாளர்
14. Dr.M.சத்யகுமார் LLM, ACA, ACMA, MA, Ph.D., தேசிய செய்தித் தொடர்பாளர்
15. J.லெனின் B.A, B.L(Hons)., சென்னை
16. V.C.சங்கரநாராயணன் B.A., B.L., மதுரை
17. T. ராஜரத்தினம், B.A., B.L., சென்னை
18. K.உதயகுமார், BA, BL., சென்னை
19. R.சுரேஷ் பாபு M.A., M.L., திருப்பத்தூர்
20. B.அன்பரசன், B.A., B.L., திருவாரூர்
21. D.அஜித் குமார் M. B. A., M.A., M.Sc., L.L.B.,
22. K.மகேந்திரன், M.A., B.L., செங்கல்பட்டு
23. V. இளமாறன் B.A., B.L., நாகப்பட்டிணம்
24. V.முத்துகுமரன் M. Tech, MBA, LLM., தஞ்சாவூர்
25. R.வெற்றிச்செல்வன் MA, BL., திருவள்ளூர்
26. P.கோகிலா ராணி MSc, M.Ed, BL., திருச்சி
27. R.லூயிசாள் ரமேஷ் BL., திருப்பத்தூர்
28. தலித் டைகர் C. பொன்னுசாமி BA, B.Ed, BL., திருவண்ணாமலை
29. தங்கசொளஞ்சிநாதன் BA, BL., கடலூர்
30. M.தியாகராஜன் BABL., சோழவந்தான்
31. K.முனியப்பன் B.E., LL.M (Cyber)., விழுப்புரம்
32. P.தனசேகரன் BSc., BL., மதுரை
33. T.நரேந்திர குமார் BA. LLB., காஞ்சிபுரம்
34. S.சுகுமார். MA., BL., திருவண்ணாமலை

எனது ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்படி 2026 சட்டமன்றத் தேர்தலுக்காக நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவிற்குக் கழக நிர்வாகிகளும், தோழர்களும் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரூர் கூட்ட நெரிசல் வழக்கு விசாரணை!



சென்னை, ஜன 31–

கரூர் கூட்ட நெரிசல் வழக்கை உச்சநீதிமன்றம் பிப்ரவரி 2 ல் மீண்டும் விசாரிக்கிறது. சிபிஐ புலன் விசாரணை தீவிரமாக நடைபெற்று வரும் சூழலில், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பார் கவுன்சில் நிர்வாகிகள் தேர்தல் வரும் மார்ச் 30-ல்!




டெல்லி, ஜன. 31–

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி பார் கவுன்சில் நிர்வாகிகள் தேர்தல் வரும் மார்ச் 30ம் தேதி நடைபெறும் என தேர்தல் குழு அறிவித்துள்ளது. மொத்தம் 25 உறுப்பினர்களில், 7 உறுப்பினர்கள் பதவி பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அதில் 5 பேர் தேர்தல் முறையிலும் 2 பேர் அகில இந்திய பார் கவுன்சில் மூலமாகவும் நியமிக்கப்படுவர்.

## டிரம்ப்-ன் இறுதி முடிவு.. இவர் தான் அடுத்த பெடரல் ரிசர்வ் தலைவர்..!!



அமெரிக்கா, ஜன. 31–


அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வெள்ளிக்கிழமை பெடரல் ரிசர்வ் வங்கியின் புதிய தலைவராக கெவின் வார்ஷ்–ஐ நியமனம் செய்ய முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளார். டிரம்ப் – ஜெரோம் பவல்–க்கு மத்தியிலான நீண்ட கால போராட்டத்திற்கு பின்பு பெட் தலைவராக புதிய நபரை தேர்வு செய்யப்பட்டு உள்ளது அமெரிக்க அரசு. இவருடைய நியமனம் அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

ஜெரோம் பவல் பதவி காலம் அடுத்த சில மாதத்தில் முடியும் வேளையில், அவருக்கு பதிலாக கெவின் வார்ஷ் நியமினம் செய்ய டிரம்ப் முடிவு செய்துள்ளார். கடந்த ஐந்து மாதங்களாக நடைபெற்று வந்த தேர்வு செயல்முறைக்கு இன்றுடன் முடிவுக்கு வந்துள்ளது. 55 வயது நிரம்பிய கெவின் வார்ஷ் 2006 முதல் 2011 வரை ஃபெடரல் ரிசர்வ் வங்கியின் கவர்னராக பணியாற்றியவர். அவருக்கு பெட் வங்கியில் அனுபவம் உள்ளது. டிரம்ப் சொல்வதை கேட்டுக்கொண்டு தலையை ஆட்டும் நபர் இவர் இல்லை என வால் ஸ்ட்ரீட்–ல் கருத்து நிலவுகிறது.



பழனி முருகன் கோவில் சார்பாக, வேல் தயார் செய்யப்பட்டுள்ளது. கோவில் இணை ஆனையர் மாரிமுத்து பார்வையிட்டார்.

## தைப்பூசம் + பௌர்ணமி..!! இரண்டும் ஒரே நாளில்..!. திருவண்ணாமலை கிரிவலம் செல்ல உகந்த நேரம் எது..?



திருவண்ணாமலை, ஜன. 31–

இந்த ஆண்டு தை மாதப் பௌர்ணமி பிப்ரவரி 1–ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) வருகிறது. பௌர்ணமி திதியானது பிப்ரவரி 1 அதிகாலை 04:41 மணிக்குத் தொடங்கி, பிப்ரவரி 2 அதிகாலை 04:43 மணி வரை நீடிக்கிறது. பக்தர்களின் வசதிக்காகத் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் நிர்வாகம் கிரிவலத்திற்கான உகந்த நேரத்தை அறிவித்துள்ளது. அதன்படி, பிப்ரவரி 1–ஆம் தேதி காலை 05:34 மணி முதல் பிப்ரவரி 2–ஆம் தேதி அதிகாலை 04:05 மணிக்குள் கிரிவலத்தை நிறைவு செய்வது உத்தமம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேஷமாக, இந்த ஆண்டு பௌர்ணமி ஞாயிற்றுக்கிழமை வருவதால் ஆன்மீக ரீதியாக இதற்குப் பல கூடுதல் பலன்கள் உண்டு. சூரிய பகவானுக்குரிய ஞாயிற்றுக்கிழமையில் கிரிவலம் செல்வது உடலில் நேர்மறை ஆற்றலை (Positive Energy) அதிகரிக்கும்; தீராத நோய்களைத் தீர்க்கும் வல்லமை கொண்டது. மேலும், பதவியில் உயர்வு பெற விரும்புவோர்க்கும், வாழ்வில் உயர்ந்த நிலையை அடையத் துடிப்போர்க்கும் இந்த ஞாயிற்றுக்கிழமை கிரிவலம் ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

என வே, அண்ணாமலையாரின் அருளைப் பெறத் துடிக்கும் பக்தர்கள் இந்த உன்னத நேரத்தை தவறவிடாமல் கிரிவலப் பயணத்தைத் திட்டமிடலாம்.

## பழனி தைப்பூசம்: பிப். 1-ல் திருத்தேரோட்டம்



பழனி, ஜன. 31–

பழனி தைப்பூசம் திருவிழாவை முன்னிட்டு, பிப்ரவரி 1ஆம் தேதி மாலை 4 மணிக்கு மேல் திருத்தேரோட்டம் நடைபெறுகிறது.

திருவிழாவையொட்டி 31ஆம் தேதி (சனிக்கிழமை) பெரியநாயகி அம்மன் கோவிலில் இரவு 7 மணிக்கு மேல், 8 மணிக்குள் சிம்ம லக்கினத்தில் முருகன் வள்ளி தெய்வானை ஆகியோரின் திருக்கல்யாணம் நடைபெறுகிறது. பின்பு மனக்கோலத்தில் இரவு 9 மணிக்கு மேல் முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் வெள்ளி ரதத்தில், ரத வீதிகளில் திருஉலா வரும் காட்சி நடைபெறுகிறது. பிப்ரவரி 1ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு மேல் 6 மணிக்குள் சண்முக நதியில் முருகப்பெருமான் தோலுக்கு இனியாளில் எழுந்தருளல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. பின்பு தீர்த்தம் கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. காலை 11:15 மணிக்கு மேல் 12 மணிக்குள் தேர் ஏற்றம் நடைபெறுகிறது. மாலை 4 மணிக்கு மேல் தைப்பூசம் திருத்தேரோட்டம் நடைபெறுகிறது. இதற்கான விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து, அறங்காவலர் குழு தலைவர் கே எம் சுப்பிரமணியம், அறங்காவலர்கள் தனசேகர், சு பாலசுப்பிரமணியம், ஜி ஆர் பாலசுப்பிரமணியம், அன்னபூரணி ஆகியோர் செய்து வருகின்றனர்.



**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு

## தமிழ் தெரிந்தவர்களுக்கு SBI வங்கியில் வேலை; 2,050 காலிப்பணியிடங்கள், டிகிரி இருந்தால் போதும்

பொதுத்துறை வங்கியான எஸ்பிஐ வங்கியில் உள்ள வட்டார அதிகாரி பதவியில் உள்ள 2,050 காலிப்பணியிடங்களை நிரப்ப ஆட்சேர்ப்பு அறிவிப்பு இன்று (ஜனவரி 29) வெளியாகியுள்ளது. இதில் தமிழ்நாட்டில் மட்டும் 165 காலிப்பணியிடங்கள் உள்ளன. டிகிரி முடித்த,

ஆர்வமுள்ளவர்கள் https://sbi.bank.in/ என்ற இணையதளத்தில் ஆன்லைன் வழியாக விண்ணப்பிக்கலாம்.

அமைப்பின் பெயர் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா
பதவியின் பெயர் வட்டார அதிகாரி (Circle Based Officer)
காலிப்பணியிடங்கள் 2,050
கல்வித்தகுதி பட்டப்படிப்பு
இணையதளம் https://sbi.bank.in/
அறிவிப்பு எஸ்பிஐ வங்கி அதிகாரி வேலைவாய்ப்பு 2026
விண்ணப்பிக்க கடைசி நாள் 18.02.2026

தேசிய அளவில் பல்வேறு மாநிலங்களில் வட்டார அதிகாரி பதவி நிரப்பப்படுகிறது. இப்பதவிக்கு உள்ளூர் மொழி தெரிந்திருப்பது கட்டாயமாகும். அதன்படி, தமிழ் மொழிக்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி ஆகிய இடங்களில் உள்ள காலிப்பணியிடங்களுக்கு தமிழ்நாட்டு இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம். சென்னை வட்டாரத்தில் மொத்தம் 165 காலிப்பணியிடங்கள் உள்ளன. இப்பணியிடங்கள் எஸ்சி – 24, எஸ்டி – 12, ஓபிசி – 44, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் – 16, பொதுப்பிரிவினர் – 69 என நிரப்பப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு 7 காலிப்பணியிடங்கள் உள்ளன.

**வயது வரம்பு**

2025 டிசம்பர் 31–ம் தேதியின்படி, விண்ணப்பதாரர்கள் 21 வயதிற்கு கீழ் இருக்கக்கூடாது. அதே போன்று, அதிகபட்சமாக 30 வயதைக் கடந்திருக்கக்கூடாது. 31.12.2004 முன்னரும், 01.01.1996 பின்னரும் பிறந்தவராக இருக்க வேண்டும். வயது வரம்பில் எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு 5 வருடங்கள், ஒபிசி பிரிவினருக்கு 3 வருடங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு 10 முதல் 15 வருடங்கள் தளர்வு வழங்கப்படும்.

**கல்வித்தகுதி**

இப்பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டப்படிப்பு அல்லது ஒருங்கிணைந்த இரண்டு பட்டப்படிப்பு ஆகியவற்றை முடித்திருக்க வேண்டும். மருத்துவம், பொறியியல், பட்டயக் கணக்காளர் (CA), செலவு கணக்காளர் (Cost Accountant) ஆகியவற்றை முடித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்கும் மாநிலத்திற்கான மொழியை அறிந்தவரா இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் நபர்கள் தமிழ் மொழியை எழுத, பேச மற்றும் படிக்க தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். 10 அல்லது 12–ம் வகுப்பில் தமிழ் மொழியை ஒரு பாடமாக கொண்டு படித்தவர்களுக்கு தகுதித் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

**அனுபவம்**

பட்டப்படிப்பிற்கு பின்னர் ஏதேனும் ஒரு வணிக வங்கி அல்லது கிராமப்புற வங்கியில் 2 ஆண்டுகள் அனுபவம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

**தேர்வு செய்யப்படும் முறை**

ஸ்டேட் பேங்க் வேலைக்கு 4 கட்ட தேர்வு முறை உள்ளன. ஆன்லைன் தேர்வு, திரைவு செய்தல், நேர்காணல் மற்றும் உள்ளூர் மொழி தேர்வு ஆகியவற்றில் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.

ஆன்லைன் தேர்வு 120 மதிப்பெண்கள் கொள்குறி வகையிலும், 50 மதிப்பெண்கள் விரிவாக விடையளிக்கும் வகையிலும் அமையும். கணினி வழியில் தேர்வு நடைபெறும். கொள்குறி வகையில் (Objective Test) நடைபெறும் தேர்வு ஆங்கிலம், வங்கி குறித்த பொது அறிவு, பொது விழிப்புணர்வு, கணினி நுண்ணறிவு ஆகியவற்றின் அடிப்படையில் அமையும்.

இதில் தேர்வாகும் நபர்களின் விவரங்கள் திரைவு குழுவின் மூலம் சரிபார்க்கப்பட்டு, நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள். இறுதியாக மொழி தகுதி பெற்ற பின்னர் பணி நியமனம் வழங்கப்படும்.

**சம்பளம்**

இப்பணியிடங்களுக்கு அடிப்படை சம்பளம் ரூ.48,480 ஆகும். அதிகபடியாக ரூ.48,480 – 85,920 என்ற விதம் சம்பள அளவு நிர்ணயிக்கப்படும்.

**விண்ணப்பிப்பது எப்படி?**

இப்பணிக்கு https://sbi.bank.in/ என்ற இணையதளத்திற்கு சென்று ஆன்லைன் வழியாக மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பக் கட்டணமாக ரூ.750 செலுத்தி நிறைவு செய்ய வேண்டும். எஸ்சி, எஸ்டி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணம் கிடையாது.

முக்கிய நாட்கள்
விவரம் தேதிகள்
விண்ணப்பம் தொடக்கம் 29.01.2026
விண்ணப்பிக்க கடைசி நாள் 18.02.2026
தேர்வு தேதி பின்னர் அறிவிக்கப்படும்

விண்ணப்பிக்கும் நபர்கள் அவர்களுக்கான உரிய இமெயில் ஐடி மற்றும் மொபைல் எண் கொண்டிருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பிக்கும்போது அல்லது கட்டணம் செலுத்தும்போது ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால், 022–22820427 என்ற எண்ணிற்கு காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்புகொள்ளலாம்.

## வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி வேலைவாய்ப்பு 2026

நிறுவனம் வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி
பதவி Intern, Lab Technician, Histopathology Technician
தகுதி B.Sc, Diploma, DMLT, M.Sc, PG Diploma
காலியிடம் 4
சம்பளம் Rs.12,762 to Rs.27,152 per month
வேலை இடம் வேலூர், தமிழ்நாடு
விண்ணப்பிக்கும் முறை ஆன்லைன்
தொடங்கும் நாள் January 27, 2026
முடியும் நாள் February 4, 2026



# தே.மு.தி.க.,வுடன் கூட்டணி பேசும் தி.மு.க!

சென்னை, ஜன. 31–
திருநெல்வேலியில் நேற்று பேட்டியளித்த தி.மு.க., துணைப் பொதுச்செயலர் கனிமொழி, "தி.மு.க., கூட்டணிக்கு புதிய கட்சிகள் வர வாய்ப்புள்ளது," என்றார்.



இதையடுத்து, அந்த புதிய கட்சி எது என்ற கேள்வி எழுந்துள்ளது. இது குறித்து, தி.மு.க., நிர்வாகி ஒருவரிடம் கேட்டபோது, 'ஆட்சியில் பங்கு, 41 தொகுதிகள் என்ற கோரிக்கையில் காங்கிரஸ் விடாப்பிடியாக இருப்பதால், மாற்று வழிகளை தி.மு.க., தலைமை யோசிக்க துவங்கியுள்ளது.

'இதற்கிடையே, 20 தொகுதிகளை கேட்டு உறுதியாக இருந்த தே.மு.தி.க., தற்போது 10 தொகுதிகளுக்கு இறங்கி வந்துள்ளது. ராஜ்யசபா எம்.பி., பதவி கேட்பதால் சிக்கல் நீடிக்கிறது. தி.மு.க., கூட்டணியில் இருந்து காங்., விலகினால், தே.மு.தி.க., ராமதாசின் பா.ம.க., புதிய தமிழகம் ஆகிய கட்சிகள் வர வாய்ப்புள்ளது.

கடந்த 2016ல் ஜெயலலிதா, சிறிய கட்சிகளோடு இணைந்து, அ.தி.மு.க.,வை தனித்தே போட்டியிட வைத்தார். அந்த மனநிலைக்கு தற்போது தி.மு.க., தலைவர் ஸ்டாலின் வந்திருக்கிறார்' என்றார்.

# ஜெயலலிதா தான் ரோல் மாடல்... அரசியலில் கிங் மேக்கராக விரும்பவில்லை - தவெக தலைவர் விஜய்!

சென்னை, ஜன. 31–
தமிழக சட்டசபை தேர்தல் தொடர்பாக ஆங்கில செய்தி சேனல் சென்னையில் அரசியல் நிகழ்ச்சி நடத்தி வருகிறது. இதில் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டு கலந்துரையாடி வருகின்றனர்.

அந்த வகையில் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளு மாறு அந்த செய்தி நிறுவனம் சார்பில் தவெக தலைவர் விஜய்க்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதேவேளை, வீட்டிற்கு நேரில் வந்து பேட்டி எடுக்கும்படி விஜய் கேட்டுக்கொண்டதையடுத்து தனியார் நிறுவன செய்தியாளர்கள் நேரில் சென்று விஜய் இடம் பேட்டி எடுத்தனர். அப்போது விஜய் இடம் பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. அந்த கேள்விகளுக்கு விஜய் பதில் அளித்தார்.

பேட்டியில் விஜய் கூறியதாவது, கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் எனக்கு பெரும் அதிர்ச்சியை



ஏற்படுத்தியது. அந்த வலியில் இருந்து இன்னும் என்னால் மீண்டுவர முடியவில்லை. இதுபோன்று நடைபெறும் என்று நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. ஜனநாயகன் பட விவகாரத்தில் தயாரிப்பாளர் பாதிக்கப்படுவது எனக்கு கவலையை அளிக்கிறது. அரசியலுக்கு வருவதால் நான் நடித்த படம் குறிவைக்கப்படும் அல்லது வேறு எதேனும் நடக்கும் என்று நான் எதிர்பார்த்தேன். அதை எதிர்கொள்ள நான் தயாராகவே இருந்தேன்.

நான் ஷாரூக்கானின் ரசிகன். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா தான் என் ரோல் மாடல். அரசியலில் நான் கிங் மேக்கராக இருக்க விரும்பவில்லை. தேர்தலில் நான் வெற்றிபெறுவேன். நான் ஏன் கிங் மேக்கராக இருக்க வேண்டும்?

நான் பல ஆண்டுகளாக சினிமா நட்சத்திரமாக இருந்துள்ளேன். ஆனால், தற்போது அரசியல் செய்ய எனது மனநிலையை தயார்படுத்திவிட்டேன். இந்த மாற்றம் சுலபமாக நடக்கவில்லை. கடினமாக இருந்தது என்றார்.

# பா.ஜ., மூத்த தலைவர் எச்.ராஜா அப்பல்லோவில் அனுமதி!

சென்னை, ஜன. 31–
திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டதால், பா.ஜ., மூத்த தலைவர் எச்.ராஜா, நேற்றிரவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சென்னை கிண்டியில் உள்ள தனியார் நட்சத்திர ஹோட்டலில், தனியார் செய்தி தொலைக்காட்சி நேற்று நடத்திய நிகழ்ச்சியில், எச்.ராஜா பங்கேற்றார்.



அப்போது, அவருக்கு திடீரென மயக்கம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அவரை உடனடியாக, அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பரிந்துரைப்படி மேல் சிகிச்சைக்காக, ஆயிரம்விளக்கு கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு, அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.




# ஆசிரியர்கள் போராட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி!

சென்னை, ஜன. 31–
'சம வேலைக்கு, சம ஊதியம்' என்ற கோரிக்கையை வலியுறுத்தி, 36வது நாளாக நேற்று போராட்டத்தில் ஈடுபட்ட, இடைநிலை ஆசிரியர்கள், காந்தியின் 75வது நினைவு நாளையொட்டி, தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றனர்.

தமிழகத்தில், அரசு தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்கள், 'சம வேலைக்கு சம ஊதியம்' வழங்க வலியுறுத்தி, இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர் இயக்கம் சார்பில், கடந்த மாதம் 26ம் தேதி முதல், சென்னையின் பல்வேறு அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு, போராட்டம் நடத்தி வருகின்றனர்.

நேற்று 36வது நாளாக, சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள பள்ளிக்கல்வித் துறை அலுவலகம் அருகே, 800க்கும் மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்கள், கோரிக்கை பதாகைகளை ஏந்தியபடி கோஷங்களை எழுப்பினர்.

போராட்டத்திற்கு இடையே, காந்தியின், 75வது நினைவு நாளையொட்டி, இடைநிலை ஆசிரியர்கள் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களை, போலீசார் கைது செய்து, பஸ்களில் ஏற்ற முயன்றனர்.

பஸ் நிரம்பிய பின்னரும், ஆசிரியர்களை அதில் ஏறும்படி போலீசார் வற்புறுத்தியதால், இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. போலீசார் அவர்களை வலுக்கட்டாயமாக ஏற்ற முயல, அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

ஆனால், விடாப்பிடியாக போலீசார் அவர்களை பஸ்களில் ஏற்றி, திருமண மண்டபங்களில் தங்க வைத்து, மாலை விடுவித்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிவகங்கை மாவட்டம் செட்டிநாட்டில் 330 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு 61 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களையும், அங்கு அமைக்கப்பட்டுள்ள அரங்கத்திற்கு"பாரத ரத்னா விருது பெற்ற சி. சுப்பிரமணியம் பல்நோக்கு அரங்கம்" என்று பெயர் சூட்டி அவ்வரங்கத்தினையும் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை தங்கம் தென்னரசு, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப. சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி, வேளாண்மை – உழவர் நலத்துறை செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் கா. பொற்கொடி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் (பொ) கா. சுப்ரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஆசிரியர் தகுதித்தேர்வு முடிவுகள் வெளியீடு!

சென்னை, ஜன. 31–
மத்திய அரசின் இலவச கட்டாயக் கல்வி உரிமை சட்டத்தின்கீழ் 1–ம் வகுப்பு முதல் 8–ம் வகுப்பு வரை பணிபுரியக் கூடிய இடைநிலை ஆசிரியர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர்களுக்கும்



ஆசிரியர் தகுதித்தேர்வு (டெட்) தேர்ச்சி கட்டாயமாக்கப்பட்டு இருக்கிறது.

இடைநிலை ஆசிரியர்கள் ஆசிரியர் தகுதித் தாள்–1 தேர்விலும், பி.எட் முடித்த பட்டதாரி ஆசிரியர்கள் ஆசிரியர் தகுதித் தாள்–2 தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும்.

ஆசிரியர் தகுதி தேர்வு எழுதுவதற்கு 2025 செப்டம்பர் மாதம் விண்ணப்பம் பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து, ஆசிரியர் தகுதித் தேர்வு 2025–க்கான தாள் 1, நவம்பர் 15–ந்தேதி 367 மையங்களில் நடைபெற்றது.

இந்தத் தேர்வினை 92 ஆயிரத்து 412 பேர் தேர்வு எழுதினர். அதேபோல் ஆசிரியர் தகுதி தேர்வு தாள் II, 2025 நவம்பர் 16–ந்தேதி நடைபெற்றது. இந்தத் தேர்வினை 3,31,923 தேர்வர்கள் கலந்து கொண்டு தேர்வு எழுதினார்கள்.

பள்ளிக்கல்வித்துறை ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதிப் பெறுவதற்கான மதிப்பெண்களை குறைத்து ஜனவரி 28–ந்தேதி அரசாணை வெளியிட்டது.


அதன்படி பொதுப் பிரிவினருக்கு 60 சதவீதம் அல்லது 90 மதிப்பெண்களும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட முஸ்லீம், சீர்மரபினர், மாற்றுத்திறனாளிகளுக்கு 50 சதவீதம் அல்லது 75 மதிப்பெண்கள், எஸ்சி, எஸ்சி அருந்ததியர், பழங்குடியினர் பிரிவினருக்கு 40 சதவீதம் அல்லது 60 மதிப்பெண்கள் என 150 மதிப்பெண்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பின்படி ஏற்கனவே 2025 நவம்பர் ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதி உள்ளவர்களுக்கும் மதிப்பெண் குறைத்து கணக்கிடப்படும் என தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில் பள்ளிக்கல்வித்துறை தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு குறைந்த பட்ச தகுதி மதிப்பெண்களை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஆசிரியர் தேர்வு வாரியம் தேர்வு முடிவுகளை அதன் இணையதளத்தில் வெளியிட்டுள்ளது. பள்ளி கல்வித்துறையின் குறைக்கப்பட்ட மதிப்பெண் அடிப்படையில் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது எனவும், தகுதி பெற்ற தேர்வர்களுக்கு பிப்ரவரி 2 தேதி மாலை முதல் ஆசிரியர் தேர்வு வாரிய இணையத ளத்தில் www.trb.tn.gov.in– தகுதி சான்றிதழ் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மார்ச் 3-ந்தேதி சந்திர கிரகணம்: திருப்பதி கோவிலில் 10½ மணி நேரம் நடை அடைப்பு!

திருப்பதி, ஜன. 31–
மார்ச் மாதம் 3–ந்தேதி சந்திர கிரகணம் நிகழ்வதையொட்டி 10½ மணி நேரம் திருப்பதி ஏழுமலையான் கோவில் நடை அடைக்கப்படுகிறது. அன்று நடக்கும் அனைத்து ஆர்ஜித சேவைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன.



இதுகுறித்து திருப்பதி தேவஸ்தானம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

வருகிற மார்ச் மாதம் 3–ந்தேதி மாலை 3.20 மணிக்கு சந்திர கிரகணம் தொடங்கி மாலை 6.47 மணிக்கு முடிகிறது. பாரம்பரிய முறைப்படி கிரகணம் தொடங்குவதற்கு 6 மணி நேரத்துக்கு முன்பே திருப்பதி ஏழுமலையான் கோவில் நடை அடைக்கப்படும்.

அதன்படி, மார்ச் 3–ந்தேதி காலை 9 மணியில் இருந்து இரவு 7.30 மணி வரை சுமார் 10½ மணி நேரம் திருப்பதி ஏழுமலையான் கோவில் நடை அடைக்கப்பட்டு, இரவு 7.30 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்படுகிறது.

அதன்பிறகு புனித சடங்குகள் நடக்கிறது. கோவிலில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய இரவு 8.30 மணியளவில் அனுமதிக்கப்படுவார்கள்.

சந்திர கிரகணத்தால் மார்ச் 3–ந்தேதி அஷ்டதள பாத பத்மாராதனை சேவை, கல்யாணோற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவம், சகஸ்ர தீபலங்கார சேவை, நெறிமுறைகளுக்கு உட்பட்ட வி.ஐ.பி. பிரேக் தரிசனம், ஸ்ரீவாணி தரிசனம், ரூ.300 சிறப்பு நுழைவு தரிசனம், 5 வயதுக்கு உட்பட்ட கைக்குழந்தைகளுடன் வரும் பெற்றோருக்கான தரிசனம், மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான தரிசனம், காணிக்கையாளர்களுக்கான தரிசனம், வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான தரிசனம் ஆகியவை ரத்து செய்யப்படுகின்றன. பக்தர்கள் மேற்கண்ட தகவல்களை கவனத்தில் கொண்டு எந்தவித சிரமமும் ஏற்படாதவாறு தங்கள் திருமலை யாத்திரையை திட்டமிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அனைத்துப் பள்ளிகளிலும் மாணவிகளுக்கு இலவசமாக நாப்கின் வழங்க உத்தரவு!



புதுடெல்லி, ஜன. 31–
மத்திய அரசின் மாதவிடாய் சுகாதாரக் கொள்கையை, நாட்டின் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் செயல்படுத்தக் கோரி ஜெயா தாக்கூர் என்பவர் பொதுநல மனு தாக்கல் செய்தார். இந்த மனு உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா, ஆர்.மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், வாழ்வுரிமை என்பது மாதவிடாய் காலத்தில் உடலை சுகாதாரமாக பராமரிப்பதையும் உள்ளடக்கியது. நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் நாப்கின்களை இலவசமாக வழங்குவது கட்டாயம். மாணவிகளுக்கென தண்ணீர் வசதியுடன் கூடிய தனி கழிப்பறையை உறுதி செய்ய வேண்டும். பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதன் மூலம்தான் ஒரு நாட்டின் முன்னேற்றம் அளவிடப்படுகிறது. இதுதொடர்பாக 3 மாதத்துக்குள் இணக்க அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டனர்.

# உடனடியாக நிதிநிலை சரியும் அபாயம்: 193 உறுப்பு நாடுகளுக்கு கடிதம் எழுதிய ஐ.நா. தலைவர்!



டெல்லி, ஜன. 31–
அவசர நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், உடனடியாக நிதிச்சரிவை எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது என்று ஐ.நா. தலைவர் அன்டோனியா குட்டெரெஸ் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில் "அனைத்து உறுப்பு நாடுகளும் தங்கள் கடமைகளை முழுமையாகவும் சரியான நேரத்திலும் நிறைவேற்ற வேண்டும். அல்லது உடனடி நிதிச் சரிவைத் தடுக்க, உறுப்பு நாடுகள் நமது நிதி விதிகளை மாற்றி அமைக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், கடிதத்தில் எந்தவொரு நாட்டையும் குறிப்பிடவில்லை. ஐ.நா.வுக்கு அதிக நிதி வழங்கும் நாடாக அமெரிக்கா உள்ளது.

அமெரிக்கா தற்போது ஐ.நா.வின் வழக்கமான வரவு செலவுத் திட்டத்திற்கு 2.16 பில்லியன் அமெரிக்க டாலர் வழங்க வேண்டும். மேலும் இந்த ஆண்டுக்கு 767 மில்லியன் அமெரிக்க டாலர்கள் வழங்க வேண்டியுள்ளது. வெனிசுலா 38 மில்லியன் டாலர் செலுத்த வேண்டியுள்ளது. தற்போது வெனிசுலா பொருளாதார சிக்கலில் மாட்டியுள்ளது.

அமெரிக்கா 2025 இறுதியில் 1.568 பில்லியன் டாலர் செலுத்த வேண்டியுள்ளது. இது 2024–ம் ஆண்டைவிட இரண்டு மடங்கு என அன்டோனியா குட்டெரெஸ் தெரிவித்துள்ளார்.

# தைப்பூச திருவிழா: திருச்செந்தூரில் குவிந்த பக்தர்கள்!

திருச்செந்தூர், ஜன. 31–
முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் தைப்பூச திருவிழா நாளை (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகிறது.

இதில் கலந்து கொள்ள நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அலகு குத்தியும், பால்குடம், காவடி எடுத்து வந்தும், வழிபாடு செய்தனர். ஏராளமான பக்தர்கள் அதிகாலையில் இருந்தே கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் சுமார் 5 மணிநேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். தைப்பூச திருவிழாவையொட்டி பூஜை நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதிகாலை 4 மணிக்கு கோவில் நடை திறக்கப்படுகிறது. 4.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை, 6 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகம், காலை 8.30 மணிக்கு தீர்த்தவாரி நடைபெறுகிறது. காலை 10 மணிக்கு சண்முகர் அபிஷேகம், பகல் 1 மணிக்கு சுவாமி அலை வாயுகந்த பெருமான் தைப்பூச மண்டபத்துக்கு புறப்படுதல், மாலை 5 மணிக்கு சுவாமி தனித் தங்க மயில் வாகனத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தவாறு கோவில் சேர்தல் நடக்கிறது. தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடைபெறுகிறது. நாளை தைப்பூச திருவிழாவில் சுவாமியை தரிசிக்க பக்தர்கள் தொடர்ந்து குவிந்த வண்ணம் உள்ளனர்.

இதற்கிடையே, கோவிலில் இன்று சுவாமி சண்முகர் கடலில் கண்டெடுக்கப்பட்ட 371–வது ஆண்டு நிகழ்ச்சி நடந்தது. இதை முன்னிட்டு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவி லில் சிறப்பு வழிபாடு நடக்கிறது. இதை முன்னிட்டு கோவில் நடை அதிகாலை 5மணிக்கு திறக்கப்பட்டது. 5.30 மணிக்கு விஸ்வருபம்,6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷே கம், காலை 10 மணிக்கு சண்முகருக்கு சிறப்பு அபிஷேகம் நட ந்தது. மாலை 4 மணிக்கு சாய ரட்சை தீபாராதனையும், மாலை 5 மணிக்கு சுவாமி அலைவாயுகந்த பெருமான் வீதி உலாவும் நடக்கிறது.

**தேவை**

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020